# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 3rd Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் Economics | Three Hours / Gr -12 (2022) | 21 | T | I,II |


**அறிவுறுத்தல்கள் :–**

- ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
- ***விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.***
- ***விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.***
- ***1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.***

## பகுதி – I

01. கீழே தரப்படும் விடயங்களில் எது மிகவும் சிறந்த வகையில் பொருளாதார அடிப்படைப் பிரச்சினையைக் குறித்து நிற்கின்றது.
   1) அதிகளவு மக்களின் வாழ்க்கைத்தரம் மிக குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை.
   2) வளங்கள் மீளாவளங்களாக இருப்பதுடன் அழிவடைந்து செல்கின்றமை.
   3) மனித விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான வளங்கள் அருமையானதாக இருத்தல்.
   4) வளங்கள் சமமற்ற வகையில் பங்கிடப்பட்டிருத்தல்.
   5) வரிவீதங்களில் ஏற்படுகின்ற அதிகரிப்பு மக்களை சேமிப்பதை குறைவடையச் செய்கின்றமை. (……….)

02. கீழே தரப்படும் உற்பத்தி சாத்திய வளையி குறித்த பொருளாதாரம் பழம் மற்றும் கோதுமையினை உற்பத்தி செய்வதற்கான மாற்றுச் சேர்க்கைகளைப் புலப்படுத்துகின்றது.




தற்பொழுது நாடு "OF" அலகு பழங்களையும் "OK" அலகு கோதுமையினையும் உற்பத்தி செய்கிறது. பொருளாதாரம் பழ உற்பத்தியை OG அலகாக உயர்த்த தீர்மானித்தது எனின் கோதுமை சார்பாக பழத்திற்கான அமையச் செலவு

1) OJ  2) JK  3) OF  4) KL  5) LJ  (……….)

03. சுதந்திரமான சந்தைப் பொருளாதாரத்தில் விலைப்பொறிமுறையானது பின்வரும் எதன் செயற்பாட்டைத் தீர்மானிக்கின்றது.

அ) வளங்களை ஒதுக்கீடு செய்தல்


ஆ) பண வருமானத்தைப் பங்கீடு செய்தல்

இ) உற்பத்தி முறையைத் தீர்மானித்தல்

1) அ மட்டும் 2) ஆ மட்டும் 3) இ மட்டும்

4) அ, ஆ மட்டும் 5) அ, ஆ மற்றும் இ (……….)

04. குறித்த பண்டத்தின் கேள்விக்கோடு வருமாறு




இக்கோட்டின் வழியே

1) X பண்டத்தின் விலை அதிகரிக்குமாயின் அதன் கேள்வித்தொகை அதிகரிக்கும்

2) X பண்டத்திற்கான கேள்வி அதிகரிக்குமாயின் விலை அதிகரிக்கும்.

3) X பண்டத்தின் விலை குறைவடையுமாயின் அதன் கேள்வித்தொகை அதிகரிக்கும்.

4) விலை மாறாத பொழுது X பண்டத்தின் கேள்வித்தொகை அதிகரிக்கும்.

5) குறித்த பண்டத்தின் விலை மட்டுமே இவ் X பண்டத்தின் கேள்வியைத் தீர்மானிக்கும் (……….)

05. கீழ்நோக்கிச் சரிந்து செல்லும் நேர்கோட்டு வழியான கேள்விக்கோட்டின் வழியே கேள்வி நெகிழ்ச்சி

1) பூச்சியம் 2) அலகு 3) நேர்க்கணியம்

4) புள்ளிக்கு புள்ளி வேறுபடும் 5) முடிவிலி (……….)

06. ஒரு சிறிய சந்தையில் பாணுக்கான கேள்வி நிரம்பல் அட்டவணை வருமாறு

| **P** | **Qd** | **QS** |
|---|---|---|
| 20 | 90 | 0 |
| 40 | 70 | 40 |

இச் சந்தையின் நிரம்பல் சமன்பாடாக அமைவது

1) $Q_S = 40 + 2P$ 2) $Q_S = 2P$ 3) $Q_S = -40 - 2P$

4) $Q_S = -2P$ 5) $Q_S = -40 + 2P$ (……….)

07. குறித்த நுகர்வோன் பண்டத்திற்கான சந்தை நிரம்பல் சமன்பாடு வருமாறு.


$Q_S = 500 + 5P$

விலை 20 ரூபா மற்றும் 30 ரூபா இற்கு இடையில் விலை நெகிழ்ச்சியை மதிப்பிட்டால் அது

1) 0.13 2) 0.2 3) 0.25 4) 0.33 5) 0.42

(……….)

08. **கீழே தரப்படும் விரைவானது DD கேள்விக் கோட்டையும் S நிரம்பல் கோட்டையும் குறித்து நிற்கின்றது.**




(……….)

மேலே உள்ள வரைபில் சந்தைச் சமநிலையில் உற்பத்தியாளன் வருமானத்தைக் குறித்து நிற்கும் பிரதேசம்.

1) A  2) B  3) BC  4) ABC  5) ABCD

(……….)

09. குறித்த பண்டத்தின் சந்தைக் கேள்வி, நிரம்பல் சமன்பாடுகள் வருமாறு


$$Qd = 6000 - 100P$$
$$Qs = -1000 + 100P$$

சமநிலை விலை மற்றும் தொகை

*1) 3500 அலகுகள், 25 ரூபா  2) 2500 அலகுகள், 35 ரூபா  3) 1500 அலகுகள், 70 ரூபா*

*4) 5000 அலகுகள், 60 ரூபா  5) 6000 அலகுகள், 10 ரூபா*  (……….)

10. கீழே தரப்படும் வரைபில் DD சந்தைக் கேள்வி வளையியையும் S நிரம்பல் கோட்டையும் SS மானியத்தின் பின் நிரம்பல் கோட்டையும் குறித்து நிற்கின்றது.




மேலே தரப்பட்ட வரைபில் மானியம் வழங்கலால் ஏற்பட்ட தேறிய சமூக நலன் இழப்பைக் குறித்து நிற்கும் பிரதேசம்.

1) BCD  2) EFG  3) DG  4) H  5) I

(……….)

11. குறித்த பண்டத்தின் சந்தை கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் வருமாறு

$$Qd = 50 - 5P \qquad Qs = -10 + 5P$$


தற்போது அரசு ரூ 8 இனை உத்தரவாத விலையாக விதித்து மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்யுமாயின் அரசிற்கு ஏற்படும் செலவு.

*1) ரூ 240  2) ரூ 160  3) ரூ 120  4) ரூ 80  5) ரூ 48*

(……….)

12. (அ) மொத்த உற்பத்தி குறைவடையத் தொடங்கும் போது குறைந்து செல்லும் எல்லை விதி தொழிற்பட ஆரம்பிக்கும்.
(ஆ) சொத்துவரி, கட்டடக் காப்புறுதி, பூர்வாங்கச் செலவு என்பன நிலையான செலவு ஆகும்.
(இ) குறைந்து செல்லும் எல்லை விளைவும் குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவும் ஒத்தவையே ஆகும்.

மேலே தரப்பட்ட விடயங்களில்
1) (அ), (ஆ) சரி ஆனால் இ பிழை
2) (அ), (இ) சரி ஆனால் (ஆ) பிழை
3) (அ), (இ) பிழை ஆனால் ஆ சரி
4) (அ), (ஆ), (இ) மூன்றும் பிழை
5) (அ), (ஆ), (இ) மூன்றும் சரி (……….)

13. 


| | |
|---|---|
| AFC | – சராசரி நிலையான செலவு |
| MC | – எல்லைச் செலவு |
| AVC | – சராசரி மாறும் செலவு |
| AC | – சராசரிச் செலவு |

மேற்படி வரைபில் இருந்து கீழே தரப்பட்டவற்றுள் சரியான தொகுதி.

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| 1) | AFC | MC | AVC | AC |
| 2) | AFC | MC | AC | AVC |
| 3) | AC | MC | AFC | AVC |
| 4) | AC | AFC | MC | AVC |
| 5) | AFC | AVC | AC | MC |

14. கீழே தரப்படுபவற்றுள் நிறைபோட்டிச் சந்தையின் பிரதான பண்புகளைக் குறித்து நிற்கும் விடை
(அ) ஒத்த தன்மையுடைய பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.
(ஆ) சந்தைத் தகவல்கள் பூரணமற்றவையாக இருப்பதுடன் தகவல்களைப் பெறுவதற்கு செலவுகள் ஏற்படும்.
(இ) உட்பிரவேசிக்கவும் வெளியேறவும் பூரண சுதந்திரம் காணப்படும்.
(ஈ) ஒரே ஒரு நிறுவனம் மட்டும் உற்பத்தியில் ஈடுபடும்.

1) (அ) வும் (ஆ) வும் மட்டும் 2) (அ) வும் (இ) வும் மட்டும் 3) (அ) வும் (ஈ) வும் மட்டும்
4) (ஆ) வும் (ஈ) வும் மட்டும் 5) (அ), (ஆ) மற்றும் (இ) மட்டும் (……….)

15. வருமானம் சுற்றோட்டத்தில் மெய்ப்பாய்சல்களில் ஒன்றாகக் கருதப்படக்கூடியது.
1) நிறுவனத்துறையிடமிருந்து வீட்டுத்துறைக்கு செல்லுகின்ற பணக்கொடுப்பனவு.
2) வீட்டுத்துறையிடமிருந்து நிறுவனத்துறைக்கு செல்கின்ற பணம் கொடுப்பனவு.
3) நிறுவனத்துறையிடமிருந்து வீட்டுத்துறைக்கு பொருட்கள் சேவைகள் செல்லுதல்.
4) நிறுவனத்துறையிடமிருந்து உற்பத்திக் காரணிகள் வீட்டுத்துறைக்கு செல்லுதல்.
5) வீட்டுத்துறையிடமிருந்து நிறுவனத் துறைக்கு பொருட்கள் சேவைகள் செல்லுதல். (……….)

16. மொத்த தேசிய வருமான (GNI) கணிப்பீட்டு உள்ளடக்கப்படக்கூடிய விடயம்.

1) வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு உணவு சமைத்தல்.
2) தாய் தன் குழந்தைகளைப் பராமரித்தல்.
3) வீட்டிலுள்ள முதியோரைப் பராமரித்தல்.
4) நீர்த்தடாங்களில் மீன்களை வளர்த்தல்.
5) வீட்டினை அழகுபடுத்தலும் சுத்தம் செய்தலும். (..........)

17. ஒரு பொருளாதாரத்தின் கற்பனையான தரவுகள் வருமாறு

| | ரூபா |
|---|---|
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 1000 |
| தனியார் நுகர்வுச் செலவு | 3000 |
| தேறிய முதனிலை வருமானம் | 200 |
| அரச கொள்வனவுகள் | 900 |
| இருப்புக்களில் ஏற்படும் மாற்றம் | 100 |
| தேறிய ஏற்றுமதி | 150 |
| இறக்குமதி | 600 |

மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) எவ்வளவு

1) ரூ 4900 2) ரூ 5050 3) ரூ 5150 4) ரூ 5350 5) ரூ 5950 (..........)


18. மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதி (GVA) என்பதனை சரியாகக் குறிப்பிடுவது.

1) குறிக்கப்பட்ட காலத்தில் குறித்த பொருளாதாரத்தால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீட்டின் அளவு.
2) மொத்த உற்பத்தி பெறுமதியில் இருந்து மொத்த இடைநிலைக் கொடுப்பனவுகளை நீக்கப் பெறப்படும் பெறுமதி.
3) குறித்த காலப்பகுதியில் குறித்த பொருளாதாரத்தால் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த வெளியீட்டின் சந்தைப் பெறுமதி.
4) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பணப்பெறுமதி.
5) குறித்த சந்தர்ப்பத்தில் குறித்த பொருளாதாரத்தின் விற்பனை செய்யப்பட்ட இறுதி முடிவுப் பொருட்கள் சேவைகளின் மொத்தப் பெறுமதி. (..........)

19. ஒரு பொருளாதாரத்தின் வருமானம் ரூபா 5000 திலிருந்து ரூபா 10000 ஆக அதிகரிக்கும் போது நுகர்வுச் செலவு ரூபா 7000 திலிருந்து ரூபா 11000 ஆக அதிகரிக்கும். இப் பொருளாதாரத்தின் தன்னிச்சையான செலவு 2000 ஆகவும் தன்னிச்சையான நுகர்வு 500 ஆகவும் காணப்பட்டது எனின் சமநிலையில் நுகர்வுச் செலவினம் எவ்வளவு.

1) ரூபா 6500 2) ரூபா 7000 3) ரூபா 7500
4) ரூபா 8500 5) ரூபா 10000 (..........)

20. கீழே தரப்படும் வரைபானது மொத்த கேள்வி (AD), மற்றும் மொத்த நிரம்பல் (AS) வரையியினை புலப்படுத்துகின்றது.




கீழே தரப்படும் விடயங்களில் தேசிய வெளியீடு எது மொத்தக்கேள்வி விளையியை $AD - AD_1$ என நகர்வடைகின்றது எனின் அதற்கு ஏதுவான காரணி.

1) வரவு செலவுத்திட்ட மிகையில் ஏற்படும் குறைவு.
2) உள்நாட்டு பொருட்கள் சேவைகளின் நுகர்வுக்கான கேள்வி வெளிநாட்டு கேள்வியுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தது.
3) அரசாங்க நடவடிக்கையால் வீட்டுத்துறையின் சேமிப்பு மட்டம் அதிகரித்தது.
4) அறிவுசார் முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு.
5) அரச செலவீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு.

(20×1=20 புள்ளிகள்)

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :-**

- **உப பிரிவுகள் "அ" "ஆ" ஆகிய ஒவ்வொன்றிலும் இருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

**உப பிரிவு 'அ'**

*01.* i) பொருளாதார வளம் என்றால் என்ன? பொருளாதார வளங்களை எவ்வாறு வகைப்படுத்த முடியும். (4 புள்ளிகள்)

ii) கீழே தரப்படும் எண்ணக்கருக்களை வரையறுக்குக.

அ) பற்றாக்குறை (Shortages)

ஆ) அமையச்செலவு (Opportunity cost) (4 புள்ளிகள்)

iii) தரப்பட்ட அட்டவணையைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| கோதுமை (கிலோ கிராம்) | துணி (மீற்றர்) |
|---|---|
| 50 | 0 |
| 40 | 5 |
| 30 | 10 |
| 20 | 15 |
| 10 | 20 |
| 0 | 25 |

அ) உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தி பொருளாதாரம் 30kg கோதுமை மாவையும் 15 மீற்றர் துணியினையும் ஒரே சமயத்தில் உற்பத்தி செய்வது சாத்தியமா? விளக்குக. (2 புள்ளிகள்)

ஆ) உமது சாத்திய வளையியில் பொருளாதாரம் 20kg கோதுமை மாவையும் 10 மீற்றர் துணியையும் உற்பத்தி செய்வது வினைத்திறனாகுமா? விளக்குக. (2 புள்ளிகள்)

iv) சுதந்திரமான சந்தைப் பொருளாதாரமா? மத்தியதிட்டமிடல் பொருளாதாரமா? நுகர்வோர் தெரிவுக்கு இடமளித்து நுகர்வோர் நலனை உச்சப்படுத்தும் விளக்குக. (4 புள்ளிகள்)

v) எதனை எந்தளவு உற்பத்தி செய்தல்? என்னும் பிரச்சினைக்கு வேறுபட்ட பொருளாதார முறைமைகள் எவ்வாறு தீர்வு காண்கின்றன என்பதனை விளக்குக. (4 புள்ளிகள்)

*02.* i) கேள்வி விதியினை விளக்கி கேள்விக்கோடு மேலிருந்து கீழ்நோக்கி இடமிருந்து வலமாக சரிந்து செல்வதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

ii) குறித்த பண்டத்தின் விலை ரூ 6 இலிருந்து ரூ 4 ஆகக் குறைவடைய கேள்வித்தொகை 8000 அலகுகளிலிருந்து 12000 அலகுகளாக அதிகரித்தது.

அ) வில் முறையினைப் பயன்படுத்தி விலைசார் கேள்வி நெகிழ்சியினை மதிப்பிடுக.

ஆ) விலை குறைவடையும் போது உற்பத்தியாளன் வருமானத்திற்கு யாது நிகழும்.

. (2x2=4புள்ளிகள்)

iii) அ) நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகள் எவை? (2 புள்ளிகள்)

ஆ) நிரம்பல் நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iv)

| P | 0 | 10 | 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 80 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Qd | 8000 | 7000 | 6000 | 5000 | 4000 | 3000 | 2000 | 1000 | 0 |
| Qs | – 1000 | 1000 | 2000 | 3000 | 4000 | 5000 | 6000 | 7000 | 8000 |


அ) சமநிலை விலை, சமநிலை தொகையினைத் தருக. *(2 புள்ளிகள்)*

ஆ) சமநிலையில் நுகர்வோன் மிகையினைக் காண்க. *(2 புள்ளிகள்)*

இ) சமநிலையில் உற்பத்தியாளன் வருமானத்தைக் காண்க. *(2 புள்ளிகள்)*

ஈ) விலை 10/= ஆகக் காணப்படும் போது மிகைக் கேள்வி எவ்வளவு? *(2 புள்ளிகள்)*

*03.* i) ஒரு நுகர்வுப் பொருளுக்கான கேள்வி நிரம்பல் வளையி வருமாறு. *(4 புள்ளிகள்)*




மேற்படி வரைபு சந்தையில் அரசினால் விஷேட அலகு வரி விதிக்கப்படுவதைக் காட்டுகின்றது.

அ) வரிக்குப்பின் உற்பத்தியாளர் மிகைப்பிரதேசம் எது?

ஆ) வரிக்குப்பின் மொத்த மிகை (Total Surplus) பிரதேசம் எது?

*(2x2=4புள்ளிகள்)*


ii) மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாக சரிந்து செல்லும் நேர்கோட்டு வழியான கேள்விக்கோட்டையும் கீழிருந்து மேல்நோக்கிய நெகிழ்ச்சி வாய்ந்த நிரம்பல் கோட்டையும் உடைய நுகர்வோர் பொருள் ஒன்றிற்கு அரசு உற்பத்தியாளனுக்கு விஷேட அலகு மானியம் வழங்கும் போது நுகர்வோன் மிகை உற்பத்தியாளன் மிகையில் ஏற்படும் தாக்கத்தினை வரைபின் உதவியுடன் விளக்குக. *(4 புள்ளிகள்)*

iii) உயர்ந்தபட்சக் கட்டுப்பாட்டுவிலையையும் குறைந்தபட்சக் கட்டுப்பாட்டுவிலையையும் வேறுபடுத்துக. *(4 புள்ளிகள்)*

iv) அத்தியாவசியப்பண்டம் ஒன்றிற்கு அரசாங்கம் உயர்ந்தபட்சக் கட்டுப்பாட்டு விலை விதிப்பதால் ஏற்படக்கூடிய பொருளாதார விளைவுகள் எவையெனக் குறிப்பிடுக.

*(4 புள்ளிகள்)*

v) கீழே தரப்படும் வரைபடமானது உத்தரவாத விலைத்திட்டத்தினை புலப்படுத்துகின்றது.




அ) குறைநிரப்பு கொடுப்பனவு வழங்குவதால் அரசுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு எவ்வளவு? (2 புள்ளிகள்)

ஆ) உற்பத்தியாளர் மொத்த வருமான பிரதேசம் எது? (2 புள்ளிகள்)

## உப பிரிவு ‘அ’

❖ **இப்பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.**

04. i) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியும் குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியும் நிறுவனத்தின் உற்பத்திச் செலவில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை விளக்குக. (4 புள்ளிகள்)

ii) பொருளியலாளர்கள் “சாதாரண இலாபத்தை” உற்பத்திச் செலவின் ஒரு பகுதியாக ஏன் கருதுகின்றனர். (4 புள்ளிகள்)

iii) உட்கிடையான செலவையும் வெளிப்படையான செலவினையும் உதாரணங்களுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

iv) அ) சந்தை அமைப்புக்களின் நான்கு வகைகளையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ) பிரவேசத் தடை என்பதனை விளக்குக. (2 புள்ளிகள்)

v) பொருளியல் வாடகையையும், மாற்றல் கட்டணத்தையும் வேறுபடுத்துக. (4 புள்ளிகள்)

05. i) வர்த்தக சகடவோட்டம் என்றால் என்ன? அதன் நான்கு கட்டங்களையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

ii) ஒரு பொருளாதாரத்தின் கற்பனையான தரவுகள் வருமாறு

| | |
|---|---|
| சந்தைக்குவரமுன் மொத்த வெளியீட்டுப் பெறுமதி | ரூ 10,000 |
| மூலப்பொருட் கொள்வனவுச் செலவு | ரூ 4,000 |
| சேவைக் கட்டணங்கள் | ரூ 1,000 |
| வாடகை | ரூ 2,000 |
| கூலி | ரூ 1,000 |
| வட்டி | ரூ 1,000 |
| இலாபம் | ரூ 500 |

அ) மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதி (GVA) எவ்வளவு?

ஆ) காரணி அல்லாக் கொடுப்பனவு (மூலதனத் தேய்வு) எவ்வளவு?

(2x2=4 புள்ளிகள்)

iii) மறைமுகப் பொருளாதாரம் மற்றும் சட்ட ரீதியற்ற பொருளாதாரம் என்பவற்றை விளக்குக? *(4 புள்ளிகள்)*

iv) அ) வீட்டுத்துறையினருக்கு கிடைக்கப்பெறாத தேசிய வருமானத்தில் உள்ளடக்கப்படும் வருமானங்களைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

ஆ) வீட்டுத்துறைக்கு கிடைக்கப்பெறும் ஆனால் தேசிய வருமானத்திற்குள் உள்ளடக்கப்பட முடியாத வருமானங்கள் எவை? *(2 புள்ளிகள்)*

v) கற்பனையான பேரினப் பெருளாதாரத் தரவுகள் வருமாறு

| | |
|---|---|
| இறுதி நுகர்வுச் செலவு (FCE) | ரூ *1,000* மில்லியன் |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் (GDCF) | ரூ *2,000* மில்லியன் |
| தேறிய ஏற்றுமதி (NX) | ரூ *500* மில்லியன் |
| தேறிய முதனிலை வருமானம் (NPI Row) | ரூ *200* மில்லியன் |
| தேறிய நடைமுறை மாற்றல் (NCT Row) | ரூ *300* மில்லியன் |

அ) சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம் எவ்வளவு? *(2 புள்ளிகள்)*

ஆ) செலவிடக்கூடிய சந்தை விலை மொத்த தேசிய வருமானம் எவ்வளவு? *(2 புள்ளிகள்)*

*06.* i) அ) மொத்தச் செலவு (AE) என்பதனை விளக்குக. *(2 புள்ளிகள்)*

ஆ) மொத்தச் செலவின் கூறுகள் எவையெனக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

ii) குறித்த பொருளாதாரத்தின் பேரினப் பொருளாதாரத் தரவுகள் வருமாறு.

| **Y** | **C** |
|---|---|
| *2000* | *2100* |
| *4000* | *3700* |

பின்வருவனவற்றை மதிப்பிடவும்

அ) நுகர்வுச் சமன்பாடு *(2 புள்ளிகள்)*

ஆ) எந்த வருமான மட்டத்தில் சேமிப்பு பூச்சியமாகக் காணப்படும் *(2 புள்ளிகள்*


iii) அ) எல்லைச் சேமிப்பு நாட்டத்திற்கும் (MPS) சமநிலைத் தேசிய வருமானத்திற்கு மிடையேயான தொடர்பினை விளக்குக. *(2 புள்ளிகள்)*

ஆ) கீழே தரப்படும் சமன்பாட்டைப் பயன்படுத்தி வரிப்பெருக்கி (KT) யைக் காண்க.

$$C = 200 + 0.75\, yd$$

*(2 புள்ளிகள்)*

iv) அ) கீழே தரப்படும் வரைபடமானது ஒரு பொருளாதாரத்தின் நேர்கோட்டு நுகர்வு வளையியினைப் புலப்படுத்துகின்றது. இப்பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டம் *0.8* ஆகும்




B புள்ளியில் மொத்த நுகர்வுச் செலவு எவ்வளவு? *(2 புள்ளிகள்)*

ஆ) $C = 1000 + 0.75yd$

$\mathrm{I} = 500$

$\mathrm{G} = 500$

$\mathrm{T} = 200$

$\mathrm{NX} = 150$

இப்பொருளாதாரத்தின் தன்னிச்சையான செலவீடுகளின் மொத்தம் எவ்வளவு? *(2 புள்ளிகள்)*

v) சமநிலை நிறைதொழில்மட்ட உற்பத்தி என்பதனை வரைபின் உதவியுடன் விளக்குக.

*(4 புள்ளிகள்)*